Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 112/2023

## Deposition of P.W.3

| | | |
|---|---|---|
| Name | : | ராமசாமி |
| Father’s Name | : | மலையப்பன் |
| Village | : | கல்லுவிடுதி |
| Religion | : | இந்து |
| Age | : | **65/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 18.06.2024**
(3,4 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். 1,2,5 எதிரிகள் ஆஜர் இல்லை. 1,2,5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல்விசாரணை**

நான் கல்லுவிடுதி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். சுமார் **2** வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. இரவு சுமார் **7.00** மணியளவில் என் வீட்டிற்கு அருகில் வசிக்கும் முத்துசாமி என்பவரது வீட்டில் ஆடு திருடுபோனது சம்பந்தமாக சம்மட்டிவிடுதி அங்குவந்து விசாரித்து சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் மாரியப்பன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்ட பார்வை மகஜர் ஆவணம் அ.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

அ.சா.1 முத்துசாமி எனது உறவினரா என்றால் சரிதான். எனது சித்தப்பா மகன் ஆவார். அ.சா.1 முத்துசாமியின் ஆடுகள் காணாமல்போனதாக சொல்லி அ.சா.1 முத்துசாமியுடன் புகார் அளிப்பதற்காக நான், மாரியப்பன் ஆகியோரும் காவல்நிலையத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து எதிரிகள் மீது நடவடிக்கை எடுப்பதாக சொல்லி போலிசார் 2,3 வெள்ளை தாள்களில் எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் போலிசார் கையொப்பம் வாங்கிய பின்னர்

வழக்கு சம்பந்தமாக மீண்டும் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கையொப்பம் நான் காவல்நிலையத்தில் வைத்து செய்தது என்றால் சரிதான்.

<u>ம.வி.இல்லை</u>